**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 202/2020**

**பி.வா.சா.1 – விஷ்வநாதன்**

**<u>26–09–2025 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. 2ம் பிரதிவாதி பாப்பா பழனியப்பனின் கணவர் பழனியப்பனுக்கு எப்போது நான் கிரையம் கொடுத்தேன் என்றால் 2010ல் கிரையம் கொடுத்தேன். நான் கிரையம் கொடுத்த விபரம் லோகநாதன் வகைராக்களுக்கு அப்போதே தெரியும். எப்படி தெரியும் என்றால் கம்பிவேலி போட்டபோது தெரியும். கம்பி வேலி எப்போது போடப்பட்டது என்றால் கிரையம் வாங்கியவுடன் உடனே நிரவி கம்பிவேலி போடப்பட்டது. நான் பழனியப்பனுக்கு கொடுத்த கிரையப்பத்திர்த்தில் கிழமேலாக உள்ள வாய்க்காலை குறிப்பிட்டு கிரையம் கொடுக்கவில்லை. நான் கிரையம் கொடுக்கும்போது கிழமேல் வாய்க்கால் அங்கு இருந்ததா என்றால் அங்கு இல்லை. வழக்கு தாக்கல் செய்தபோது தாவாவில் சொல்லியுள்ளது போல் தண்ணீர் பாசனம் செய்யப்பட்டு வந்ததா என்றால் கருப்பு ஓஸ் வழியாக தண்ணீர் போய்வந்தது.

2. பழனியப்பனுக்கு கிரையம் கொடுத்த பூமிக்கு தண்ணீர் பாசனம் இருந்ததா என்றால் இல்லை. நான் வழக்கில் சொல்லியுள்ளது போல் தாண்ணீர் பூமிக்கு அடியில் சென்று பைப் வழியாக எந்த வருடம் வரை வந்தது என்றால் 2010 வரை வந்தது. அதன் பிறகு வரவில்லையா என்றால் கருப்பு ஓஸ் வழியாக வந்தது. பிரமாணபத்திரக்கையில் சொல்லியுள்ள சங்கதிகளை பார்வையிட வழக்கறிஞர் ஆணையரை நியமிக்க தயாராக உள்ளேன்.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனது சகோதரர் கந்தசாமிக்கு எதிராக வாய்க்கால் தொடர்பாக அ.வ எண். 388/2014 ஐ தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அவ்வழக்கில் எனது மூத்த சகோதரர் 2ம் வாதிக்கு எதிராக பொது கிணற்றில் இருந்து தண்ணீரை நான் கொண்டு செல்லும்போது 2ம் வாதி கந்தசாமி இடையூறு செய்யக்கூடாது என்று வழக்கு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். அவ்வழக்கில் எங்களுக்கு சாமாதனம் ஏற்ப்பட்டு சாமாதனம் மனு தாக்கல் செய்து வழக்கை திரும்ப பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். எங்கள் அனைவருக்கும் தண்ணீர் கொண்டுசெல்லும் பாத்தியமானது வா.சா.ஆ. 1 பாகப்பிரிவினை பத்திரத்தில் உள்ள பொது சரத்தின் படி உள்ளது என்றால் சரிதான்.

2. சிமெண்ட் பைப்பானது மூத்த சகோதரர் பூமியில் இருந்து இரண்டாவது சகோதரர் பூமி வழியாக வந்து கிழபுறம் உள்ள சிமெண்ட் தொட்டியில் தண்ணீர் விழுந்து அது வழியாக தண்ணீர் செல்கிறது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் 2010ம் ஆண்டு முதல் கருப்பு ஓஸ் வழியாக தண்ணீர் கொண்டுபோய் இருந்தால் அதன் குறிப்பு அ.வ. 388/2014ல் இருந்திருக்கும் என்றால் வழக்கு தாக்கல் செய்தபோது கருப்பு ஓஸ் வழியாகதான் தண்ணீர் சென்றுகொண்டு இருந்தது, அதனை தான் அவர்கள் தடுத்தார்கள். பின்னர் பஞ்சாயத்து செய்து மூவரும் கையெழுத்து போட்டுள்ளார்கள். நான் சொல்வது போல் கருப்பு ஓஸ் வழியாக தண்ணீர் போய் இருந்தால் அதனை மேற்டிப வழக்கில் சொல்லியிருப்பேன் என்றும், அவ்வாறு இல்லாததால் தான் அதனை சொல்லவில்லை என்றும், தற்போது வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்லும் பஞ்சாயத்து சம்பந்தமாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3. நானும் எனது சகோதரரும் 1998 ல் ஏற்படுத்தப்பட்ட பாகசாசனப் பூமி பொறுத்து கட்டுப்படாத பூமி பொறுத்து ஏற்படுத்திக்கொண்டு சமாதான பத்திரம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 பாக சாசன கட்டுப்படாத பூமிக்குண்டான வரைபடம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 3 ல் உள்ள கட்டிடத்திற்கு எனது வீட்டில் இருந்து போர் போட்டு குழாய் அமைத்து தண்ணீர் கொண்டு செல்கிறேன் என்றால் மாநகராட்சியிடம் உத்தரவு பெற்று ரோடு வழியாக கொண்டு செல்கிறேன். ரோடு வழியாக செல்வது தான் கருப்பு ஓஸ் என்றால் சரியல்ல. கிணற்று தண்ணீர் வருவது தான் கருப்பு ஓஸ். எனது ஆவணத்தில் வாய்க்கால் இருக்கும் பட்சத்தில் நான் எனது காம்பிலக்ஸ்க்கும் வீட்டிற்கும் தனியாக கருப்பு ஓஸ் வழியாக தண்ணீர் கொண்டு வர அவசியம் இல்லை என்றால் அங்கு குழாய் இல்லாததால் போர் போட்டு தண்ணீர் கொண்டு செல்கிறேன்.

4. எனக்கு எனது சகோதரர்களுக்குமான பொது பூமியை அழித்துவிட்டதால் தான் தனிப்பட்ட முறையில் ஓஸ் மூலம் தண்ணீர் கொண்டு செல்கிறேன் என்றால் வாய்க்கால் அழிக்கவில்லை. நானும் 2 ம் பிரதிவாதியின் கணவரும் வாய்க்காலை அடைத்ததால் 1, 2 வாதிகளின் வாய்க்கால் ஓரம் உள்ள தென்னம்பிள்ளைகளுக்கு தண்ணீர் செல்லாமல் மிகுந்த கச்ட நச்டத்திற்கு உள்ளானார்கள் என்றால் சரியல்ல. அதற்கு சொட்டு நீர் பாசனம் தான் பாய்கிறது. நான் வாதிகளுக்கு எதிராக என்னுடைய காம்பிலக்ஸ்ற்கு பொது கிணற்றில் இருந்து தேவைப்படும் போது தண்ணீர் கொண்டு செல்வதை அ.வ. 155/2020 ஐ திருப்பூர் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

5. அவ்வழக்கு தள்ளுபடியாகவிட்டதால் மாநகராட்சியிடம் அனுமதி பெற்று போர் போட்டு தண்ணீர் கொண்டு சொல்கிறேன். மேற்படி வழக்கில்

பொது கிணற்றில் இருந்து தாவா வாய்க்கால் வழியாக தாவா காம்பிலக்ஸ்ற்கு தண்ணீர் கொண்டுபோக வேண்டும் என்று நான் கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் தள்ளுபடியாகிவிட்டதால் இவ்வழக்கில் வாதிகள் கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது )

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

ஒம்/- திருமதி. A.சுபஸ்ரீ,L.L.M.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.